# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/16 - 2021 ජුනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2231/16 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆவது மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆவது இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டத்தின் உபப் பிரிவு 4 (1), பிரிவு 6 மற்றும் பிரிவு 14 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிவிக்கிறேன்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, யூன் 11.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் "2021 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்பட முடியும்.

2. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2021, யூன் 11 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு/ விமான வழி ரசீது திகதியைக் கொண்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மட்டுமே பொருந்தும்.

3. கீழே விவரிக்கப்பட்டுள்ள பொருட்கள் அவற்றின் தொடர்புடைய உள்ளீடுகளுடன் சேர்த்து, திருத்தப்பட்டவாறான 2017, நவெம்பர் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இல் உட்சேர்க்கப்படல் வேண்டும்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| | நிரல் I எச் எஸ் தலைப்பு | நிரல் II எச் எஸ் குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (L) |
|---|---|---|---|---|---|
| **260** | **63.07** | | | **பிற தயாரிக்கப்பட்ட பொருட்கள், ஆடை வடிவமைப்புகள் உள்ளடங்கலாக** | |
| | | 6307.90.00 | - | பிற | |
| | | 6307.90.10 | -- | முகக்கவசம் | L |
| | | | | | |
| **261** | **71.08** | | | **தங்கம் (பிளட்டினம் பூசப்பட்ட தங்கம் உட்பட) செய்யப்படாத அல்லது அரைவாசி தயாரிக்கப்பட்ட வடிவங்கள், அல்லது மா வடிவில்)** | |
| | | | - | நாணயமற்றது: | |
| | | 7108.11.00 | -- | மா | L |
| | | 7108.12.00 | -- | ஏனைய செய்யப்படாத வடிவங்கள் | L |
| | | 7108.13.00 | -- | பிற அரைவாசி தயாரிக்கப்பட்ட வடிவங்கள் | L |
| | | | | | |
| **262** | **71.11** | 7111.00.00 | | **அடிப்படை உலோகங்கள், வெள்ளி அல்லது தங்கம் பிளட்டினத்துடன் பூசப்பட்டது, அரை உற்பத்தி செய்யப்பட்டதை விட வேலை செய்யவில்லை. (தங்கம் பிளட்டினத்துடன் மட்டும் பூசப்பட்டது)** | L |
| | | | | | |

4. பின்வரும் பொருட்களுக்கு செலுத்தப்பட வேண்டிய இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம், திருத்தப்பட்டவாறான 2016, பெப்புருவரி 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணத்தின் அட்டவணை I இல் உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

| தொடர் இல. | விடயம் | இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமக் கட்டணம் |
|---|---|---|
| **63** | **தங்கம்** | சீஐஎப் பெறுமதியில் 0.4% |

5. கீழே விவரிக்கப்பட்டுள்ள பொருட்கள், அவற்றின் தொடர்புடைய உள்ளீடுகளுடன் சேர்த்து, திருத்தப்பட்டவாறான 2017, நவெம்பர் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் அட்டவணை I இலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

| | நிரல் I எச் எஸ் தலைப்பு | நிரல் II எச் எஸ் குறியீடு | | நிரல் III விபரம் | நிரல் IV இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் (L) |
|---|---|---|---|---|---|
| **229** | **63.07** | | | **பிற தயாரிக்கப்பட்ட பொருட்கள், ஆடை வடிவமைப்புகள் உள்ளடங்கலாக** | |
| | | 6307.90.00 | - | பிற (முகக்கவசம் மாத்திரம்) | L |

06-364

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.